வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் , கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஓட்டேரி பகுதியில் மழை வெள்ள பாதிப்புகளை 03.12.2024 அன்று பார்வையிட்டு, ஓட்டேரி பகுதியை கடலூர்பண்ருட்டி (வழிபாலூர்) சாலையில் இணைக்கும் வகையில் கெடிலம் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வு செய்தார். உடன் சிறப்பு கண்காணிப்பு அலுவலர்/ ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு திட்ட இயக்குனர் /மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ராமன் மற்றும் நெடுஞ்சாலைத்துறை, ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

விழுப்புரம் மாவட்டம், சிறுகடம்பூர் சாவடி தெருவில் நேற்று (03.12.2024) மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்ததீர்வைத் துறை அமைச்சர் V செந்தில்பாலாஜி பெஞ்சல் புயல் காரணமாக பெய்து வரும் கனமழை மற்றும் தீவிர புய புயல் பாதிப்பு காரணமாக சேதமடைந்த மின் கட்டமைப்பு சீரமைப்பு பணிகளை ஆய்வு செய்து, விரைந்து சீரான மின் விநியோகம் வழங்க உத்தரவிட்டார். உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க. நந்தகுமார், இயக்குநர் (பகிர்மானம்) அ. ரா. மாஸ்கர்னஸ், மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

‘டிஜிட்டல் டெண்டிஸ்டரி’ கருத்தரங்கம்!

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்.மருத்துவப் பல்கலைக் கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, டிச. 5 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (3.12.2024) சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழக நூற்றாண்டு நினைவு கட்டிடத்தில் Digital Dentistry எனும் கருத்தரங்கினை தொடங்கி வைத்தார். பின்னர் அனைத்து பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் தங்களது துறையில் சிறப்பாகவும், ஒருங்கிணைந்த பயிற்சி மேற்கொள்வதற்கும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல் கலைக்கழகம் மற்றும் இந்திய அவசர சிகிச்சை மருத்துவ சங்கம், தமிழ்நாடு சுகாதார நலனுக்கான உயர்திறன் மேம்பாட்டு மையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் தமிழ்நாடு முழுவதும் உள்ள மருத்துவக்கல்லூரிகளில் விஞ்ஞான சுவரொட்டி (Scientific poster) விளக்க காட்சி சிறந்து அமைத்த மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் தெரிவித்ததாவது:

“Digital Dentistry “ - கருத்தரங்கம்

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல் கலைக்கழகத்தில் மருத்துவத்துறை வாரியாக மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த கருத்தரங்கங்கள் துறைகள் தோறும் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்றும், நாளையும் “Digital Dentistry Insights“ எனும் கருத்தரங்கள் இன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்த பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கத்தினைப் பொறுத்தவரை 2 நாட்கள் நடைபெறும். தமிழ்நாட்டில் அரசு மற்றும் தனியார் பல் மருத்துவக்கல்லூரிகளைச் சார்ந்த மாணவ, மாணவியரும், மருத்துவப் பேராசிரியர்களும் இதில் கலந்து கொண்டு வளர்ந்து வரும் மருத்துவத்திற்கு ஏற்ப அதிநவீன தொழில்நுட்ப வசதிகளை கையாள்வது, அதிநவீன தொழில்நுட்ப கருவிகளை பயன் படுத்துவது போன்ற பல்வேறு தகவல்கள் குறித்து இங்கே விவாதிக்கப்பட உள்ளார்கள். மாணவ, மாணவியரின் கருத்துக்கள், கட்டுரைகளாக வடிவமைக்கப்பட்டு இன்று புத்தகமாக வெளியிடப்பட்டி ருக்கிறது. தமிழ்நாடு முழுவதிலும் 1500 மருத்துவ மாணவர்கள் இதில் பதிவு செய்து கருத்தரங்கம் மற்றும் பயிலரங்கத்தில் பங்கேற்றிருக்கிறார்கள். பல் மருத்துவத்தின் அடுத்தக்கட்ட வளர்ச்சிக்கு இந்த பயிலரங்கம் பெரிய அளவில் உறுதுணையாக இருக்கும்.

மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் தொடர்பான கேள்விக்கு

பெஞ்சல் புயலினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு குறிப்பாக மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் என்கின்ற வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவ முகாம்கள் நடத்திட வேண்டும் என்று அறிவுறுத்தியதற்கு ஏற்ப கடந்த மாதம் அக்டோபர் 14ஆம் தேதி மருத்துவ முகாம்கள் தொடங்கப்பட்டது. தற்போது வரை நடைபெற்றுள்ள மருத்துவ முகாம்களின் எண்ணிக்கை 54,107 ஆகும். இதில் 29,29,667 பேர் மருத்துவ பயன் பெற்றிருக்கிறார்கள். மருத்துவத் துறையின் வரலாற்றில் ஒன்றரை மாத கால வரலாற்றில் இவ்வளவு மருத்துவ முகாம்கள் வடகிழக்கு பருவமழை காலத்தில் நடத்தப்பட்டது இல்லை. முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப, 500 மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, சென்னையில் 200 முகாம்களும், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை போன்ற பல்வேறு மாவட்டங்களில் 300 மருத்துவ முகாம்கள் என்கின்ற வகையில் மொத்தம் 500 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் செங்கல்பட்டு, சென்னை, காஞ்சிபுரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவள்ளூர், விழுப்புரம் போன்ற மாவட்டங்களில் 576 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது. நேற்று நடத்தப்பட்ட மருத்துவ முகாம்களில் 31,377 பேர் பயன்பெற்றி ருக்கிறார்கள். நேற்று முன்தினம் மற்றும் நேற்று ஆகிய இரண்டு நாட்களில் நடத்தப்பட்டிருக்கின்ற மருத்துவ முகாம்களின் எண்ணிக்கை 1146, இதில் 62,981 பேர் பயன் பெற்றிருக்கிறார்கள். இன்றும் குறிப்பாக விழுப்புரம், கடலூர், செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, செய்யார், வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், பூந்தமல்லி, காஞ்சிபுரம், கோயம்புத்தூர், மேட்டூர், நீலகிரி ஆகிய பகுதிகளில் 718 மருத்துவ முகாம்கள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விழுப்புரத்தில் 116 மருத்துவ முகாம்களும், கடலூரில் 52 மருத்துவ முகாம்களும், செங்கல்பட்டு 50 இடங்களிலும், இராணிப்பேட்டையில் 14 இடங்களிலும், கள்ளக்குறிச்சி 54, திருவண்ணாமலை 54, செய்யாரில் 65, வேலூரில் 25, திருப்பத்தூரில் 20, தர்மபுரி 24, கிருஷ்ணகிரி 50, திருவள்ளூரில் 35, பூவிருந்தவல்லியில் 25, காஞ்சிபுரத்தில் 50, கோயம்புத்தூரில் 68, நீலகிரியில் 16 என 718 மருத்துவ முகாம்கள் இன்றைக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே மழை பாதிப்பு கள் ஏற்பட்ட அனைத்து இடங்களிலும் மழைக்கால நோய்ப்பாதிப்புகள் தடுத்திடும் வகையில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது.

இளநிலை, முதுநிலை மருத்துவ படிப்பு NRI சேர்க்கை தொடர்பான கேள்விக்கு

தமிழ்நாட்டினைப் பொறுத்தவரை மருத்துவ மாணவர்களுக்கான மருத்துவ சேர்க்கை பொதுவாக வெளிப்படைத்தன்மையுடன் நடத்தப்பட்டு வருகிறது. அதில் ஏதாவது முறைகேடுகள் இருந்தால் அதனை தடுத்திடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. முதுகலை மருத்துவப் பட்டப்படிப்புகளுக்கு MD, MS, DNP ஆகிய படிப்புகளில் சேர்க்கைக்கான முதல் சுற்று கலந்தாய்வு தற்போது நடைபெற்று வருகிறது. விண்ணப்ப படிவங்கள் 03.09.2024 முதல் 15.09.2024 வரை அழைக்கப்பட்டது. அதில் 2294 இடங்கள் மருத்துவக்கல்வி மாணவர்களுக்கான இடங்கள் நிரப்பப்பட விருக்கிறது. அதில் 1094 இடங்கள் அரசுப்பணியில் உள்ள மருத்துவ மாணவர்களுக்கு ஒதுக்கப்படவிருக்கிறது. மீதமிருக்கும் 50% மருத்துவ இடங்கள் அரசுப்பணியில் இல்லாதவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தனியார் மருத்துவக் கல்லூரியில் NRI ஒதுக்கீட்டில் 89 இடங்கள் இருக்கின்றது. அரசு ஒதுக்கீட்டில் 8,182 இடங்கள், நிர்வாக ஒதுக்கீட்டில் 4,139 இடங்கள் என 12,321 இடங்களுக்கு விண்ணப்பம் செய்திருந்தனர். தமிழ்நாடு அரசு மேற்கொண்ட சேர்க்கை நடவடிக்கைகளில் விண்ணப்ப படிவங்களை அவர்கள் கூர்ந்து கவனித்து ஆராய்ந்ததில் சான்றிதழ் சரிபார்ப்பின் போது இளங்கலை மருத்துவ படிப்பு (UG) பொறுத்தவரை, 8 பேருடைய NRI வெளிநாடு ஒதுக்கீட்டில் படித்தவர்கள் என்று தூதரகத்தில் வாங்கப்பட்ட சான்றிதழ்கள் போலி என்று நிரூபணமாகியிருக்கிறது.

சந்தேகம் ஏற்பட்டு துறையின் சார்பில் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டதில் மொத்தம் 601 NRIக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள், தனியார் கல்லூரிகள் தான் நிரப்புவார்கள். 601 இடங்களுக்காக பெறப்பட்ட விண்ணப்பங்கள் 633. இதில் தகுதி காணப்பட்டது 564. இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள NRI இடங்கள் 201. தூதரகம் மூலம் சரிபார்க்கப்பட்டு போலியானது என்று அறிவிக்கப்பட்டது 8 பேருடைய சான்றிதழ்கள். சம்பந்தப்பட்ட 8 பேருக்கு சட்டப்பூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று சென்னை மாநகர காவல் ஆணையருக்கு துறையின் சார்பில் புகார் அனுப்பப்பட்டிருக்கிறது. இதில் 3 பேருக்கு வழங்கப்பட்ட இடம் இரத்து செய்யப்பட்டுள்ளது. ஒருவர் மட்டும் நீதிமன்ற த்திற்கு சென்றிருக்கிறார்கள். மீதமிருக்கும் 4 பேருக்கு இடம் ஒதுக்கப்படவில்லை. இப்படி அவர்கள் மேல் சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கவும், இன்றைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதேபோல் முதுகலை பட்டப்படிப்பை பொருத்தவரை 47 மருத்துவர்கள் போலியாக தூதரக சான்றிதழை பெற்றிருக்கிறார்கள். இந்த 47 நபர்களுக்கும் எந்த இருக்கையும் அமல்படுத்தப்படவில்லை. அமல்படுத்தும் முன் சான்றிதழ் சரிபார்ப்பு நிலையிலேயே போலி தூதரக சான்றிதழ் கண்டுபிடிக்கப்பட்டது. தூதரகத்திலிருந்த பெறப்பட்ட சான்றிதழ்கள் போலியானவை என கண்டறியப்பட்ட காரணத்தினால், இந்த 47 நபர்கள் மீதும் சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என காவல் துறை ஆணையரிடத்தில் புகார் தரப்பட்டிருக்கிறது.

நடவடிக்கைகள் காவல் துறை எடுத்து வருகிறது. அதாவது இதுதான் முதல் தடவை, சான்றிதழ் சரிபார்ப்பினை நன்கு ஆராயும்போது இது போன்ற தவறுகள் தெரியவருகிறது. இது ஒரு பெரிய குழு திட்டமிட்டு இதனை செய்து வருகிறது. தூதரகத்தி லிருந்து அளிப்பதைப் போலவே, ஒரு போலியான சான்றிதழை தயார் செய்து அளிப்பது தண்டனைக்குரிய குற்றம். இந்த சான்றிதழை தயார் செய்து வழங்கியது யார் என்ற விசாரணை காவல் துறை மூலம் நடைபெற்று வருகிறது. மருத்துவத்துறை அதிகாரிகள் மிகுந்த விழிப்புணர்வோடு இந்த தேர்வு முறைகளை செய்து வருகிற காரணத்தினால் இந்த போலி சான்றிதழ்களை சந்தேகம் வந்து கண்டறிய தொடங்கி இருக்கிறார்கள்.

செவிலியர்கள் பணி நியமனம் தொடர்பான கேள்விக்கு

நிரந்தர செவிலியர் பணியிடங்களைப் பொருத்தவரை 71 காலிப்பணியிடங்கள் உள்ளது. அது ஒரு வாரத்தில் நிரப்பப்படும். நேற்று முன்தினம் 1,200 ஒப்பந்த பணிநியமனங்கள், நிரந்தர பணிநியமனங்களாக மாற்றப்பட்டிருக்கிறது. கொரோனா காலத்தில் தற்காலிக அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட 963 செவிலியர்கள் பணியிலிருந்து விடுவி க்கப்பட்டு தற்போது ஒப்பந்த பணியாளர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் அறிவுரைப்படி மொத்தம் 2,163 செவிலியர்களும் பணியாளர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்வாறு எல்லா இடங்களிலும் 100 சதவீதம் செவிலி யர் பணியிடம் நிரப்ப ப்பட்ட மாநிலமாக தமிழ்நாடு இருக்கும்.

அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவது தொடர்பான கேள்விக்கு

அரசு மருத்துவமனைகளுக்கு தான் அரசியல் தலைவர்களாக இருந்தாலும் சரி, வசதி படைத்தவர்களும் அரசு மருத்துவமனைகளுக்கு வரவேண்டும் என்பதால் தான், இப்பொழுது 15 மருத்துவமனைகளுக்கு அதற்கான வசதிகள் ஏற்படுத்தி கொண்டு வருகிறோம். இராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் மட்டுமே தனி அறைகள் இருந்தது. தற்போது 15 அரசு மருத்துவமனைகளில் (Pay wards) என்று சொல்லக்கூடிய கட்டண படுக்கை அறைகள் தமிழ்நாடு முழுவதும் இப்போது திறந்து வைத்துக்கொண்டு வருகிறோம். சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர் போன்ற இடங்களில் திறந்து உள்ளோம். கடந்த வாரம் கூட திருநெல்வேலியில் திறந்து ள்ளோம். மேலும் தமிழ்நாடு முழுக்க 40 மருத்துவமனைகளில் (Pay wards) திறந்து வைக்க உள்ளோம். 20, 30 படுக்கை அறைகள் கட்டி வசதிகள் உள்ளவர்களுக்கு, அதாவது ரூ.1000/ ரூ.1500/ கட்டக்கூடியவர்கள் அவர்களுக்கு தனி அறைகள், அதில் தொலைக்காட்சி பெட்டி, தனி குளியல் அறை, கழிவறை, சுடுதண்ணீர், குளிர் நீர் வருவது போன்ற வசதி வைத்து அனைத்து மருத்துவமனைகளிலும் திறந்து வருகிறோம். இன்னும் நிறைய திறப்பதற்கான முயற்சி செய்து கொண்டு இருக்கிறோம்.

இப்பொழுது இது வந்ததற்கு பிறகு இந்த நேரத்தில் கொஞ்சம் வசதி படைத்தவர்களும் அரசியல் தலைவர்களும் கூட நிறைய அந்த மருத்துவமனையில் தான் இருக்கிறார்கள். நேற்றைக்கு கூட கம்யூனிஸ்ட் தலைவர் பாலகிருஷ்ணன் ஐயா இராஜீவ் காந்திஅரசுமருத்துவமனையில் தான் சிகிச்சை செய்தார்கள். இப்பொழுது கடந்த 3 மாதங்களுக்கு முன்னாள் எனக்கு ஒரு சின்னதாக ஒரு மயக்கம் வந்தது, உட னடியாக நான் சென்று சிகிச்சை செய்து கொண்டது ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் தான், ஆஞ்சியோ சிகிச்சை செய்து கொண்டேன். அதனால் விருப்பம் இருப்பவர்கள் அத்தனை பேரும் வருகிறார்கள். அதற்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழகதுணை வேந்தர் மரு.கே.நாராயணசாமி, பதிவாளர் மரு.பி. ஆறுமுகம், கோயம்புத்தூர் ஸ்ரீ இராமகிருஷ்ணா பல் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.எல். தீப நந்தன் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில்

100 க்கு மேற்பட்ட மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி முன்னிலையில்!

நாமக்கல், டிச. 5 -

நாமக்கல் கிழக்கு மாவட்டம் இராசிபுரம் ஒன்றியம், சந்திரசேகரபுரம் ஊராட்சி அ.தி.மு.க. கிளை செயலாளர் பி.காமராஜ் மற்றும் வார்டு உறுப்பினர் ஆர்.சந்திரா ஆகியோர் தலைமையில் 100 க்கும் மேற்பட்டோர் அ.தி.மு.க.விலிருந்து விலகி நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் முன்னிலை யில் கழகத்தில் இணைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் இராசிபுரம் ஒன்றிய குழு தலைவரும், ஒன்றிய கழக செயலாளருமான கேபி.ஜெகநாதன், மாவட்டப் பொருளாளர் ஏகே.பாலசந்தர், ஒன்றிய கழக செயலாளர்கள் நாமகிரிப்பேட்டை கேபி.இராமசுவாமி, சேந்தமங்கலம் அ.அசோக்குமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சத்யசீலன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் சிவக்குமார், முன்னாள் ஒன்றிய குழு துணை தலைவர் மணிமாறன், ஒன்றிய பொருளாளர் முத்துசெல்வம், முன்னாள் ஊராட்சி செயலாளர் முருகேசன், சார்பு அணி துணை அமைப்பாளர் பன்னீர் செல்வம், கண்ணன், முகேஸ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சிவகங்கை நகர் கழகத்தின் சார்பில் கழக இளைஞரணி செயலாளரும் தமிழக துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நகரக் கழக செயலாளர் சி.எம்.துரை ஆனந்த் தலைமையில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நகர் மன்ற துணை தலைவர் எம்.கார் கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் ஆலங்குளம் ஒன்றியம் கடங்கநேரியில் மாபெரும் கைப்பந்து போட்டி மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் அய்யம்பெருமாள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் பங்கேற்று வெற்றி பெற்ற அணிக்கு பரிசு கோப்பைகளை வழங்கினார். நிகழ்வில் ஆலங்குளம் ஒன்றிய குழு தலைவர் திவ்யா மணிகண்டன்,பேரூராட்சி மன்ற தலைவர் சுதா மோகன்லால், கீழப்பாவூர் பேரூர் கழகச் செயலாளர் ஜெகதீசன், ஊராட்சி மன்ற உறுப்பினர் அசோக்,அணி அமைப்பாளர் ஹரிஹரசுதன், துணை அமைப்பாளர்கள் பொன்னரசு,அஜய்குமார், மாஸ்டர் கணேஷ், ஊராட்சி மன்றத் தலைவர்கள் முருகன், செல்வராஜ், சந்திரசேகர், ஆலங்குளம் வடக்கு ஒன்றிய உதயநிதி நற்பணி மன்ற தலைவர் அருணா பாண்டியன் அருள், வழக்கறிஞர் பெர்வின் ராம், விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 32 வது வட்டத்தில் மாவட்ட பிரதிநிதி சிவில் எம்.செல்வம் ஏற்பாட்டில் ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.சுதர்சனம் வழங்கினார். உடன் மண்டல குழு தலைவர் எஸ் நந்தகோபால் பகுதி கழகச் செயலாளர் ஜி.துக்காராம் மாமன்ற உறுப்பினர் புத்தகரம் இ.ஏழுமலை, வட்ட செயலாளர் எம்.சரவணன், டி.சுந்தரம், துரை ஸ்ரீராமுலு, தே. ரமணன், கௌதம், பாலாஜி, ஆர்.எஸ்.ரவிச்சந்திரன், வேலு, எம்.டி.சி.சுந்தர்ராஜன், முல்லை ஆறுமுகம், பத்மநாபன், ஆர்.தேவன், ஹேமாவதி, கேதார்நாத், ஆர்.ஸ்ரீதரன், எஸ்.என். கோதண்டன், ஹரி பாபு, எஸ்.கே அன்பழகன், என்.செல்வம், ஆர்.முருகன், எஸ் முத்துகிருஷ்ணன், கே பாக்யராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளர் சு.முத்துசாமி வழிகாட்டுதலின்படி சித்தோடு சக்தி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு ஈரோடு ஒன்றிய கழக செயலாளர் தோப்பு டி.சதாசிவம் தலைமையில் வெற்றிக் கோப்பை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். நிகழ்வில் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், ப.க.பழனிச்சாமி, க.சின்னையன், செல்ல பொன்னி, பேரோடு பிரகாஷ், கதிரம்பட்டி மகாலிங்கம், செல்வம், சக்தி உயர்நிலைப் பள்ளி தாளாளர் செந்தில்குமார், பார்த்திபன், தனலட்சுமி, திருமூர்த்தி, மோகனசுந்தரி, விக்னேஷ், லோகேஷ், சக்திவேல் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.